செ.வெ.எண். 1/2026 நாள் : 05.04.2026

# திருப்பூர் மாநகராட்சி

## பத்திரிக்கை செய்தி

திருப்பூர் மாநகராட்சிக்கு 2வது, 3வது மற்றும் 4வது குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் பெறப்பட்டு வருகிறது. இவற்றில் தலைமை நீரேற்று நிலையம் மேட்டுப்பாளையம் 4வது குடிநீர் திட்டத்தில் அடிக்கடி மின் தடங்கள் ஏற்படுவதாலும், 3வது குடிநீர்த்திட்ட NTADCL நிறுவனத்தினர் 06.04.2026 (திங்கட்கிழமை) அன்று பராமரிப்பு பணி மேற்கொள்ள இருப்பதால் குடிநீர் இறைப்பு பணி நிறுத்தப்பட்டவுள்ளது.

இதனால் மாநகரில் குடிநீர் பகிர்மானத்தில் குடிநீர் பெறப்படுவது தடைப்படுவதால் 07.04.2026 (செவ்வாய்க்கிழமை) மட்டும் குடிநீர் விநியோகம் இராது. ஆதலால் பொதுமக்கள் குடிநீரை சேமித்து வைத்து சிக்கனமாகவும் நன்கு காய்ச்சியும் குடிநீரை பருக வேண்டும் என மாநகராட்சி ஆணையாளர் திரு.எம்.பி.அமித் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு : மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாநகராட்சி.**